1975 நவம்பர் 5]

[முற்பகல் 10.00]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

தூத்துக்குடி கடற்கரையிலிருந்து சென்ற சில மீனவர்கள் காணாமல் போனதும், புயல்பற்றி எச்சரிக்கப்படாததும், மீனவரிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. எ. சுப்பிரமணியம், திரு. ஜேம்ஸ் ஆகிய மூவரும்

'missing of 7 fishermen who sailed in a mechanised fishing boat from Tuticorin Coast on 26th October 1975 and failure to give adequate warning regarding impending storm and unrest among fishermen in this area'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இன்று இங்கு வரக்கூடிய நேரத்தில் அந்த ஏழு பேர்களும் இராமேஸ்வரம் கடற்கரையில் ஒதுங்கி, காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற நற்செய்தி வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ள இரண்டு மூன்று காரணங்கள் என்னவென்றால் ஒன்று தூத்துக்குடி கடற்கரையிலிருந்து சென்ற ஏழு பேர்களும் ஒரு மெக்கானைஸ்ட் போட்டில் சென்றார்கள். அப்படி மெக்கானைஸ்ட் போட்டில் சென்றால் புயல் மற்றவைபற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்ற கருத்து அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிற காரணத்தால்தான் இவர்கள் சென்ற இரண்டு மணி நேரத்திற்குள் புயல் வந்து அதற்குப் பின்னால் செல்லக்கூடியவர்கள் எச்சரிக்கையாக இருந்தார்களே தவிர தூத்துக்குடி

போன்ற பகுதிகளில் முன்கூட்டியே இதுமாதிரி புயல் வரும் என்று எச்சரிக்கப்பட்டு, அதை மீறிப் போகாமல் இருப்பதற்குத் தடை போட அரசாங்கம் தவறி இருக்கிறது.

அடுத்தபடியாக, சென்ற மாதம் 26-ம் தேதி அவர்கள் சென்ருர்கள். அதற்குப் பிறகு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏதோ ரெஸ்க்யூ ஸ்க்வாட் அனுப்பியிருப்பதாகச் சொன்னுர்கள். நமக்குத் தெரியும். நடுசமுத்திரத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களை இந்த ஸ்க்வாட் போய் காப்பாற்றியிருக்கிருர்களா என்ருல் நமக்குக் கிடைத்த தகவல் விமானம் மேலே பறந்ததாகவும் அந்த விமானத்தை இந்த ஏழு பேர்களும் பார்த்திருக்கிருர்கள். அந்த விமானம் எப்படியாவது தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வெள்ளை வேஷ்டி எல்லாம் வீசியிருக்கிருர்கள். விமானத்தில் சென்றவர்கள் அப்படி வீசியதைப் பார்க்கவில்லை. டைவ் பண்ணிப் பார்க்கக்கூடிய அளவிற்கு விமானத்தில் செல்ல வேண்டும். அப்படி செய்து இம்மாதிரி விபத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களைக் காப்பாற்றக்கூடிய வகையில் அந்த ஸ்க்வாடில் செல்லக்கூடியவர்கள் இருக்க வேண்டும். ரெஸ்க்யூ ஸ்க்வாடில் சென்றவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. இந்த மீனவர்கள் செல்வதற்கு முன்னுல் எந்தவித எச்சரிக்கையும் செய்யப்படவில்லை. ஆகவே இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி பகுதி வரை பூராவும் உள்ள மீனவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் இன்று செய்யவில்லை என்பது வருந்தத்தக்க நிலையாகும்.

பொதுவாக மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது என்பதுதான் பேச்சாக இருக்கிறது. எப்படியோ அவர்கள் தப்பித்து வந்திருக்கிருர்கள் அதிர்ஷ்டவசமாக—எந்த வார்த்தையைச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை—அவர்கள் தப்பித்து வந்திருக்கிருர்கள். அப்படி அவர்கள் தப்பித்து வந்ததற்கும் அரசாங்க நடவடிக்கைகளுக்கும் எந்தவிதமான இணைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, மீனவர்களுக்குச் சரியானபடி பாதுகாப்பு கொடுப்ப தற்கான ஏற்பாட்டைச் செய்ய சபையை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிப்பது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல் காணாமல் போன தாக அறிவிக்கப்பட்ட மீனவர்கள் தப்பித்து வந்துவிட்டார்கள் என்ற செய்தி உண்மையிலே ஆறுதல் தரத்தக்க செய்திதான்.

நம் கடற்கரைப் பகுதிகளில் புயல் அடிக்கடி வந்தவண்ணம் இருக்கின்றது. அப்படி புயல் வருவதை முன்கூட்டியே அறிவிக்கக் கூடிய ராடார் சாதனங்கள் எல்லாம் இருக்கின்றன. அதேபோல் பல எச்சரிக்கைகளும் விடப்படுகின்றன. சென்றவர்கள் விசைப் படகுகளில் சென்றிருக்கிறார்கள் என்றாலும்கூட எச்சரிக்கை செய் யப்படாததால் இவர்கள் கடலில் காணாமல் போயிருக்கிறார்கள்.

இன்றைன்று இவர்களைத் தேடுகிற முயற்சியை கைவிட்டுவிட்ட தாக இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கிடைத்திருக்கிறார்கள். அப்படியானால் அரசு இவ்வளவு வசதி களையும் வைத்துக்கொண்டு, இவர்கள் கிடைக்கமாட்டார்கள் என்று கைவிட்ட பிறகும் கிடைத்திருக்கிறார்கள் என்று வரும்போது தேடுகிற முயற்சியில் ஏதோ கோளாறு அல்லது குறைபாடு இருக் கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இதில் லா அண்ட் ஆர்டர் எப்படி இன்வால்வ் ஆகியிருக்கிறது என்று தெரியவில்லை. உயிரோடு திரும்பி வந்தவர்களுக்கு அட்ஜோர்ன்மென்ட் மோஷன் என்றால் லா அண்ட் ஆர்டர் எப்படி இதில் வருகிறது என்று தெரியவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் லா அண்ட் ஆர்டர் பிரச்னை இருந்தால்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்பதில்லை. ஹெலிகாப்டர் பயன்படுத்தியிருந்தால் நூல் ஏணி போட்டு காப்பாற்ற வாய்ப்பு இருந்திருக்கும். நீண்ட கடற்கரை உள்ள நம் நாட்டில் கடலில் காணாமல் போனவர்களைக் காப்பாற்ற ஹெலிகாப்டரை உபயோகப்

படுத்த வேண்டும். நிரந்தரமாக ஹெலிகாப்டர்களை வைத்துக் கொண்டிருப்பார்களானல் இப்படி கடலில் காணுமல் போகிறவர் களைத் தேடிக் காப்பாற்ற வசதியாக இருக்கும். அதோடு புயல் பற்றி எச்சரிக்கை செய்யத் தவறியிருக்கிறார்கள். காப்பாற்றுகிற முயற்சியில் போதுமான அக்கறை இல்லை.

ஆகவே, இப்படிப்பட்ட குறைகளை அகற்ற சபையை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்று கூறி அவையை ஒத்திவைத்து, இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கடலில் காணுமல் போன மீனவர்கள் தப்பித்து வந்திருப்பது மகிழ்ச்சிகரமான செய்தி யாகும். இந்தச் செய்தி வருவதற்கு முன்பாகவே நாங்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். பத்து தினங் களாக கடலில் அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லை என்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள். பத்து நாட்களுக்குப் பிறகு அவர்கள் கரை சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னல் நிச்சயமாக அவர்களது நிலையை அரசாங்கம் மேலும் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு, காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும். காரணம் அவர்கள் பெரியதொரு விபத்தில் சிக்கி தப்பித்திருக்கி றார்கள் என்று சொன்னல் அரசாங்கம் அவர்களுக்கு ஆன உதவி களைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அப்பகுதியில் இம்மாதிரி விபத்துக்கள் அடிக்கடி நடந்துகொண் டிருக்கின்றன. குறிப்பாக மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இம்மாதிரி விபத்துக்களில் மாட்டிக்கொள்கிறார்கள். அது தவிர்க்க முடியாதது என்றிருந்தாலும் அரசு தீவிர முயற்சி எடுத்து வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தால்—இம்மாதிரி புயல் வர இருக்கிறது, ஆகவே மீனவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முன்கூட்டியே அறிவித்திருந்தால் இம்மாதிரியான விபத்துக்களில் இருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். பல தடவை இம் மன்றத்தில் இம்மாதிரி

யான விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அரசும் வாக்குறுதி அளித்திருக்கிறது. வாக்குறுதி அளித்திருக்கிறதே தவிர இவர்களைக் காப்பாற்ற என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதற்கான விளக்கங்கள் இதுவரை கூறப்படவில்லை. வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் விபத்துக்கள் ஏற்படாமல் இருந்திருக்கும். ஆகவே, இம்மாதிரியான விபத்துக்கள் இனிமேல் ஏற்படாதிருக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இப்போதிருக்கிற சூழ்நிலையில் அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று சொன்னாலும் அவையை ஒத்திவைத்து விவாதித்தால் மேலும் பல்வேறு காரியங்களை ஆராய உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தால் அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் கேள்வி ஒன்றுக்கு இதைப் பற்றிய கருத்தை சுருக்கமாக விளக்கினேன். வானிலை சம்பந்தப்பட்ட வகையில் வானிலை ஆராய்ச்சியாளர்கள் கடலில் புயல் சின்னம் உருவாகும்போது கடற்பகுதிகளிலுள்ள மீனவ இலாக்கா அதிகாரிகளுக்கு அறிவிப்பதோடு வானொலி மூலமும் ஒலிபெருக்கி மூலமும் தெரிவித்திருக்கிறார்கள்.

26—10—1975 அன்று மாலை காற்றுடன் கலந்த மழை சுமார் 48 மணி நேரம் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. தகவல் இரவு சுமார் 11 மணிக்குக் கிடைத்தது. உடனடியாக கடலோர மீனவக் குடும்பங்களுக்கும் மீனவக் கூட்டுறவு சம்மேளனத்திற்கும் தூத்துக்குடியில் தகவல் தரப்பட்டது. வேண்டிய எச்சரிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. படகு 26—10—1975 சுமார் 4 மணிக்குக் கிளம்பியிருக்கிறது. இயந்திரம் பழுதடைந்து சரியாக வேலை செய்ய முடியாத காரணத்தினால் படகில் சென்ற மீனவர்கள் தங்கூடாம் பாய்ச்ச முடியாமல் கடலில் படகை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

நேற்று, காணாமல் போன மீனவர்கள் கரை சேர்ந்து விட்டதாகத் தகவல் கிடைத்தது. இப்போது அவர்களுக்கு முறையாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஒருவரது நிலை கொஞ்சம் கவலைக்குரியதாக இருந்தது. ஆகவே அவருக்குப் பிராணவாயு செலுத்தப்பட்டு இப்போது அவர் நல்ல நிலையில் இருக்கிறார் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது இந்தத் துறையின் மூலம் எந்தெந்த வகைகளில் எல்லாம் மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியுமோ அந்தந்த வகையில் அளிப்பதற்கு அரசு முயற்சி எடுத்து இருக்கிறது என்பதாகும்.

'தஸ்நிவாஸ்' என்னும் 32 அடி நீளமுள்ள விசைப்படகு 27—10—1975 அன்று ஏழு மீனவர்களுடன் திருச்செந்தூர் தாலுகா மனப்பாடு கிராமத்திற்கு எதிருள்ள கடலில் மீன்பிடிக்கச் சென்றது. அப்படகு 29—10—1975 வரை திரும்பாமற் போகவே, அன்று மாலை 5.30 மணிக்கு தூத்துக்குடி மீனவர் சம்மேளனத் துணைத் தலைவர் திரு. நிக்கலஸ் பர்ணாண்டோ மூலம் செய்தி கிடைத்தது. இச்செய்தியைக் கேள்வியுற்றதும், என் துறையைச் சார்ந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மத்திய மாநில அரசுக்குச் சொந்தமான படகுகளின் உதவியோடு காணாமற்போன படகை கண்டுபிடிக்க விரைந்து செயல்படுமாறு உத்தரவிட்டேன்.

காணாமற்போன அந்த விசைப்படகில் சென்ற மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் :—

30—10—1975 அன்று காலை இதுபற்றி எல்லாக் கடலோரப் பகுதி மீன்துறை உதவி இயக்குநர்களுக்கும் அவசரக் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் மண்டபம் ஆழ்கடல் மீன்பிடி நிலைய துணை இயக்குநர், இராமேஸ்வரம் கரையோரப் பகுதி மீன்பிடி நிலைய உதவி இயக்குநர், மாநில துறைமுக அலுவலர் திருவொற்றியூர் கம்பியில்லாத் தந்தி உதவிப் பொறியாளர், ஆகியோருக்கும் அவசரக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. தொலைபேசி மூலமும் மண்டபம் மற்றும் தூத்துக்குடி மீனளத்துறை துணை இயக்குநர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. மேலும், மல்லை ஆகிய 57 அடி மீன்பிடி டிராலர்கள் தேடும் முயற்சியில் ஈடுபட்டன. மற்றும் 43½ அடி சிறிய படகுகளும் அனுப்பப்பட்டன.

அது மட்டுமல்லாமல் சம்மேளனத்திற்குச் சொந்தமாக இருக்கின்ற தனியார் படகுகளும் உதவி செய்வதற்காகக் கோரப்பட்டு, அவைகளும் காணமல் போன விசைப் படகைக் கண்டுபிடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவோடு நில்லாமல், ஸ்ரீலங்காவில் இந்திய உயர் ஆணையாளர் அலுவலகத்து இரண்டாம் செயலருடன் தொடர்புகொண்டு மேற்படி படகு இலங்கை கடலோரப் பகுதியில் ஒதுங்கினல் இந்தியாவிற்குத் தகவல் கொடுத்து அவர்களைத் திரும்ப அனுப்ப ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

துறை அதிகாரிகள் எடுத்த முயற்சி பலனளிக்காது போகவே, 31—10—1975 அன்று 'இந்து விமானம்' விமானப் படை விமானம், ஆகியவற்றைத் தேடுவதற்கான முயற்சியில் ஈடுபடுத்த தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளப்பட்டது. அன்றே அரசு இந்திய உயர் ஆணையாளருக்கு இதுபற்றி டெலக்ஸ் மூலம் அறிவித்தது. விமானம் மூலம் தேட அன்று மாலை அரசு முடிவெடுத்து தாம்பரம் விமான படைத் தலைமை அலுவலகத்தைக் கேட்டுக் கொண்டது. அவர் சென்னையில் தகுந்த விமானம் தயாராக இல்லாத நிலையில், பெங்களூர், ஐதராபாத் ஆகிய இடங்களிலிருந்து விமானமொன்றைப் பெற நடவடிக்கை எடுத்து முடிவாக ஐதராபாத்திலிருந்து ஓர் விமானத்தை அனுப்ப ஏற்பாடு செய்தார். வானிலை சரியாக இல்லாத காரணத்தால் விமானம் சரியான நேரத்திற்கு வந்து சேரவில்லை.

இந்த விளக்கங்களெல்லாம் இங்கே கூறுவதற்குக் காரணம், உடனடியாக என் முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்று கேட்டதற்கு, என்னுடைய துறையின் மூலம் நான் பெற்ற தகவல்களை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2—11—1975 அன்று காலை 7.30 மணிக்கு வந்து சேர வேண்டிய விமானம் மாலை 6.30 மணிக்குத்தான் சென்னை வந்து சேர முடிந்தது. மீன்துறை இணை இயக்குநர் (ஆராய்ச்சி) அவ்வப்போது விமானம் வருவது பற்றி விமான நிலைய அலுவலர்களைக் கேட்டு விபரம் பெற்று வந்தார். 3—11—1975 காணமற்போன

மீனவர்களையும், படகையும் பற்றிய முழு விபரத்தையும் தேட வேண்டிய இடங்கள் பற்றிய விபரத்தையும் இணை இயக்குநர் அவர்களிடமிருந்து விமான அலுவலர் பெற்றுக்கொண்டு சரியாகக் காலை 8.06 மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து தேடுவதற்குக் கிளம்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை மிக நீளமாக இருந்தால், உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கி விடலாமே?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : உறுப்பினர்கள் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதால்தான் படித்துக் காட்டுகிறேன்.

நாம் கண்டுபிடிக்க எடுத்துக்கொண்ட முயற்சி கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது என்று மாண்புமிகு சுப்பிரமணியம் கூறினார்கள். விமானம் மூலம் தேடுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் இனி பலன் அளிக்காது—ஸ்ரீலங்கா கடலோரப் பகுதிகளிலும் தேடப்பட்டது—என்று கூறப்பட்டபோதிலும், விசைப் படகுகள் மூலம் அந்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டதேயொழிய எடுத்துக்கொண்ட முயற்சி கைவிடப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, நல்ல வேளையாக காணாமல் போன மீனவர்கள் கிடைத்து விட்டார்கள், அவர்கள் உயிருக்கு ஆபத்து இல்லை என்பதை எடுத்துக் கூறி, இந்தத் தீர்மானத்திற்காக அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதை தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லையென்று கருதுவதால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.